இணைப்பு I

(507 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

அறிவிப்புகள், 2010-2011

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் 2010-2011 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்:

1. பள்ளிகளை நிலை உயர்த்துதல் (Upgradation of Schools)

(i) 10 ஆதி திராவிடர்/பழங்குடியினர் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக ரூ.2.98 கோடி செலவில் நிலை உயர்த்தப்படுகின்றன.

(ii) 4 ஆதி திராவிடர்/பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.2.09 கோடி செலவில் நிலை உயர்த்தப்படுகின்றன.

2. மருத்துவப் படிப்பு பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் உயர் கல்வி சிறப்பு உதவித் தொகையானது 100 சதவீதமும் மானியமாக வழங்கப்படும். தற்போது மருத்துவ மாணவ/மாணவியர்களுக்கு உயர் கல்வி உதவித் தொகையானது ரூ.7,000/- வழங்கப்படுகிறது. அதில் 75% மானியமாகவும், 25% கடனாகவும் வழங்கப்படுகிறது.

3. அதிக மதிப்பெண் எடுத்த ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு (1 மாணவர் மற்றும் 1 மாணவி) வழங்கப்படும் பரிசுத் தொகையானது பத்தாம் வகுப்பில் முதல் பரிசு ரூ.25,000/- எனவும், இரண்டாம் பரிசு ரூ.20,000/- எனவும், மூன்றாம் பரிசு ரூ.15,000/- எனவும், பன்னிரண்டாம் வகுப்பில் முதல் பரிசு ரூ.50,000/-, இரண்டாம் பரிசு ரூ.30,000/-, மூன்றாம் பரிசு ரூ.20,000/- எனவும் 2010-2011 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும்.

[2010 ஏப்ரல் 29

4. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெற வருமான வரம்பானது கிராமப் பகுதிகளுக்கு ரூ.16,000/- எனவும், நகர்ப் பகுதிகளுக்கு ரூ.24,000/- எனவும் உள்ளது. தற்போது இந்த வருமான வரம்பானது கிராமப் பகுதிகளுக்கு ரூ.30,000/- எனவும் நகர்ப் பகுதிகளுக்கு ரூ.50,000/- எனவும் உயர்த்தப்படுகிறது.

5. ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் குடும்பத்திற்கான ஈமச் சடங்கிற்கான செலவினத் தொகை ரூ.500/-ல் இருந்து ரூ.2500/- ஆக நல வாரியங்களில் வழங்கப்படுவது போன்று உயர்த்தப்படுகிறது.

6. தீண்டாமையை ஒழிக்கும் பொருட்டு, தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமம், மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்தின் வளர்ச்சிக்காக ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 2010-2011 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொகை ரூ.2.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

7. 100 மாணவர்களுக்கு மேல் தங்கியிருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு ஒரு முழு நேர துப்புரவுப் பணியாளரும், 50 மாணவர்களுக்கு மேல் தங்கியிருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு ஒரு பகுதிநேர துப்புரவுப் பணியாளரும் நியமிக்கப்படவுள்ளனர்.

8. ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் 25 புதிய விடுதிகள் துவக்கப்படும்.

9. வெளிநாடுகளில் படிக்க உதவித் தொகை தேவைப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1.44 இலட்சத்திலிருந்து ரூ.3.00 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

10. தமிழ்நாட்டில் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கென 1,229 விடுதிகள் உள்ளன. இவ்விடுதிகளில் 84,886 மாணாக்கர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் அதிக எண்ணிக்கையிலான மாணாக்கர்களுக்கு விடுதியில் தங்கிப் பயில இடம் கிடைக்காத நிலை நிலவுகிறது. தேவைப்படும்

2010 ஏப்ரல் 29]
அனைத்து ஆதி திராவிட மாணாக்கர்களும் தங்கிப் பயில இடவசதி அளிக்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்துடன் 1,000 இடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்படுகின்றன.

11. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 36 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசிடமிருந்து மானியம் பெற்று விடுதிகளைப் பராமரித்து வருகின்றன. இதில் 5,604 மாணாக்கர்கள் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர். இந்நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கும் உணவு மானியம், அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும். உணவு மானியமாக, ரூ.450/- அளவுக்கு வழங்கப்படும். மேலும் அரசு விடுதிகளுக்கு உணவு மானியம் உயர்த்தப்படும்போதெல்லாம் இந்நிறுவனங்களுக்கும் உயர்த்தி வழங்கப்படும்.

12. ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், பள்ளிக் கல்வித் துறையில் பணி வரன்முறை செய்யப்பட்டதைப்போல, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையிலும், ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 174 ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாக பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணி வரன்முறை செய்யப்படுகிறது.

சிறப்பு மாநில நிதிமூலம் செயல்படுத்தவுள்ள புதிய திட்டங்கள்

இந்த அரசு பொறுப்பேற்றபின் முதன் முதலாக ஆதி திராவிடர் நலனில் சிறப்பு அக்கறை கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பு மாநில நிதி உதவி வழங்கி வருவது போன்று, நடப்பு நிதியாண்டு 2010-2011 ஆம் ஆண்டிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு மாநில நிதி உதவியாக ரூ.25.00 கோடியினை ஒதுக்கியுள்ளார்கள். இந்நிதியிலிருந்து பின்வரும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

13. CAT/XAT பயிற்சி

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கும் CAT/XAT போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது அவசியம். எனவே, இதுபோன்ற தேர்வுகளுக்குத் தயார் செய்யும் இளைஞர்களை ஊக்கப்படுத்த 150 நபர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

[2010 ஏப்ரல் 29

14. தொழிற்சார் சிறப்புப் படிப்புகளுக்கான நிதியுதவி

தற்போது தமிழ்நாட்டில் பட்டயக் கணக்கர் (CA), செலவுக் கணக்கர் (CWA) போன்ற படிப்புகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆர்வம் காட்டுவது குறைவாக உள்ளது. இந்நிலையை மாற்ற இப்படிப்பு படிக்கும் மாணவர்களின் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவற்றை அரசே ஏற்கும். இதற்காக 100 நபர்களுக்கு ரூ.12.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

15. தேசிய நிறுவனங்கள்மூலம் பயிற்சி

தேசிய நிறுவனங்களான CIPET மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சியும், ATDC மற்றும் NIFT மூலம் ஆயத்த ஆடை வடிவமைத்தல் பயிற்சியும், CTFI, FDDI மூலமாக தோல் பொருள் மற்றும் காலணி தயாரித்தல் பயிற்சியும், NFDC மூலம் திரைப்படம் சார்ந்த துறையில் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி உடனடி வேலை கிடைக்க உறுதி செய்யும் வகையில் 1,300 இளைஞர்களுக்கு ரூ.220.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

16. உணவு பரிமாறுதல் பயிற்சி/உணவு தயாரித்தல் மற்றும் பதப்படுத்துதல்

உணவு தயாரித்தல் மற்றும் பதப்படுத்துதல் துறையில் தேவை அதிகமிருப்பதால், 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு உணவு தயாரித்தல், உணவு பரிமாறுதல் மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகிய பயிற்சிகள் ரூ.3.60 கோடி செலவில் அளிக்கப்படும்.

17. உதவி செவிலியர் பயிற்சி

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உதவி செவிலியர் வேலைக்கு வாய்ப்பு அதிகமிருப்பதால் 250 நபர்களுக்கு நற்பெயர் பெற்ற பயிற்சி நிறுவனங்கள்மூலம் ரூ.50.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

2010 ஏப்ரல் 29]

18. கனரக ஓட்டுநர் பயிற்சி

கனரக வாகன ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி, சாலைப் போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport), அசோக் லேலண்ட், TVS போன்ற நிறுவனங்கள்மூலம் 250 நபர்களுக்கு ரூ.62.50 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

19. ஜேசிபி, பொக்லைன், Forklift வாகனங்கள் இயக்குதல் பயிற்சி

ஜேசிபி, பொக்லைன், Forklift வாகனங்களை இயக்குபவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஜேசிபி, Forklift இயக்குபவர் பயிற்சி நற்பெயர் பெற்ற தனியார் நிறுவனங்கள்மூலம் 200 நபர்களுக்கு ரூ.12.50 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

20. மின் சாதனங்களைப் பழுதுபார்த்தல், குளிர்சாதனப் பெட்டி மற்றும் டீசல் கம்மியர், (Diesel Mechanic), பொருத்துநர் (Fitter), வாகனக் கம்மியர் (Motor Mechanic), மின் குறைந்தழுத்த மற்றும் உயர் அழுத்த கம்பி நுட்பாளர் பயிற்சி

மின் சாதனங்களைப் பழுதுபார்த்தல், குளிர்சாதனப் பெட்டி மற்றும் டீசல் கம்மியர் (Diesel Mechanic), பொருத்துநர் (Fitter), வாகனக் கம்மியர் (Motor Mechanic), ஆகிய பயிற்சிகளுக்கு வெளிநாடுகளிலும், தொழிற்கூடங்களிலும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளதால் மேற்கண்ட பயிற்சிகள் நற்பெயர் பெற்ற நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படும். மேலும், தமிழ்நாடு மின் வாரியத்தின்மூலம் மின் குறைந்தழுத்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பி நுட்பாளர் பயிற்சிகள் அளிக்கப்படும். இத்தகைய பயிற்சிகள் 2,500 நபர்களுக்கு ரூ.400.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

21. கணினிப் பயிற்சி

கணினித் துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்கு மிகவும் குறைவாக உள்ளதால் இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகப்படுத்த வேலைவாய்ப்பு அதிகம் உள்ள கணினி சார்ந்த சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

[2010 ஏப்ரல் 29

மேலும், பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயின்று வரும் ஆதி திராவிட பழங்குடியின இளைஞர்களுக்கு பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் உடனடி வேலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும் (IT Finishing School Training for Technical and Non-Technical Graduates). இத்தகைய பயிற்சிகள் 10,000 நபர்களுக்கு ரூ.6.75 கோடி செலவில் அளிக்கப்படும்.

22. கண் சிகிச்சை உதவியாளர் பயிற்சி

கண் சிகிச்சைக்கான சிறப்பு உதவியாளர்களின் தேவை அதிகரித்து வருவதால் இவ்வாண்டு ரூ.1.20 இலட்சம் செலவில் தமிழகத்தின் சிறந்த கண் மருத்துவமனைகள் மூலம் 100 நபர்களுக்கு கண் சிகிச்சை உதவியாளர் பயிற்சி அளிக்கப்படும்.

23. தொழில் முனைவோருக்கு மூலதன உதவி

ஆதி திராவிடர் / பழங்குடியின மக்களில் பெரும்பான்மையோர் சிறந்த தொழில் முனைவர்களாக வரக்கூடிய தகுதிகள் அனைத்தும் பெற்றிருந்தும் பொருளாதார வசதியின்மையால் தொழில் துவங்க இயலாத நிலை உள்ளது. சுமார் 5 நபர்களைத் தொழிலதிபர்களாக்கும் முயற்சியில் சிறப்பு மூலதன மானியமாக ரூ.50.00 இலட்சம் அல்லது திட்டத் தொகையில் 10 சதவீதம், இதில் எது குறைவோ அத்தொகை அரசு மானியமாக வழங்கப்படும். மீதமுள்ள தொகை வங்கிக் கடன் மற்றும் பயனாளி பங்குத் தொகையாகும். ரூ.2.50 கோடிக்கு மேல் முதலீட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழில்களுக்கு இச்சிறப்பு மூலதன மானியம் வழங்கப்படும்.

24. மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பாளர் பயிற்சி

500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பாளர் பட்டயப் பயிற்சி (Diploma in Medical Laboratory Technique) வழங்கப்படும்.

25. அழகுக்கலைப் பயிற்சி

500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு அழகுக்கலைப் பயிற்சி (Beautician Course) வழங்கப்படும்.

2010 ஏப்ரல் 29]

26. தையற்கலைப் பயிற்சி

500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தையற்கலைப் பயிற்சி (Tailoring Course) வழங்கப்படும்.

27. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றத் தேவைப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்ய *500* நபர்களுக்கு ரூ. *17.50* இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

28. சில்லறை மேலாண்மை, சுற்றுலா மேலாண்மை மற்றும் விமான பயணச் சீட்டு பதிவு செய்தல் (Air Ticketing) பயிற்சி

சில்லறை மேலாண்மை, சுற்றுலா மேலாண்மை மற்றும் விமான பயணச் சீட்டு பதிவு செய்தல் (Air Ticketing) பயிற்சிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்கு குறைவாக உள்ளதால், இப்பயிற்சிகளுக்கு *1,200* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ.*147.00* இலட்சம் செலவில் இப்பயிற்சிகள் வழங்கப்படும்.

29. ஆதி திராவிட கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி

கிராமப்புற இளைஞர்களும் ஆங்கிலத்தில் பேசும் திறமையை வளர்க்க, ஆதி திராவிடர் கல்லூரி மாணவர்களுக்கு (*4,000* இளைஞர்களுக்கு) ரூ.*120.00* இலட்சம் செலவில் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும். *2010-2011* ஆம் ஆண்டில் புதிய அறிவிப்பாக வெளியிடவிருக்கும் பகுதி-II திட்டங்கள்:

(அ) ஆதி திராவிடர் நலம்

30. 13 மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கும், *11* தனி வட்டாட்சியர்களுக்கும், மொத்தம் *24* பழைய ஈப்புகளைக் கழிவு செய்து புதிய ஈப்புகள் ரூ. *120.00* இலட்சத்தில் வழங்கப்படும்.

[2010 ஏப்ரல் 29

31. 10 சமுதாயக் கூடங்கள் ரூ.100.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

32. 160 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகளுக்குக் குடிதண்ணீர் தூய்மைப்படுத்தும் கருவிகள் ரூ.28.80 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

33. 26 ஆதி திராவிடர் நல பெண்கள் விடுதிகளுக்கு ரூ.10.40 இலட்சம் செலவில் கணினிகள் வாங்கப்படும்.

34. ஆதி திராவிடர் நல ஆணையர் அலுவலகத்திற்கு கணினி மென்பொருள், மேசை மற்றும் நாற்காலி, ஒரு நகரி இயந்திரம், ஒரு தண்ணீர் சுத்திகரிப்புக் கருவி, ஒரு ஒளிநகல் இயந்திரம், அலுவலகக் கூட்ட அரங்கிற்கு 21 நாற்காலிகள், கூட்ட அரங்கிற்கு ஒரு எல்.சி.டி. திரைப்படக் கருவி, ஒரு தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் இரு குளிர்சாதன இயந்திரங்கள் ரூ.20.07 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

35. 100 விடுதிகளுக்கு குடிநீர் தூய்மைப்படுத்தும் கருவிகள் ரூ.9.00 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

36. 66 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட உபகரணங்கள் ரூ.33.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

(ஆ) பழங்குடியினர் நலம்

37. பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் ரூ.11.79 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

38. பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு கணினி மற்றும் அதன் துணைப் பாகங்கள், கணினி மேசை மற்றும் நாற்காலிகள், குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் குளிர்நீர் கருவி, மடிக் கணினி (Laptop) *ஆகியவை ரூ.1.83 இலட்சம் செலவில் வாங்கப்படும்.*

39. தமிழகத்திலுள்ள பழங்குடியினர்களின் சமூக பொருளாதார நிலை குறித்ததான கணக்கெடுப்புப் பணி ரூ.10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

40. பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளி / விடுதிகள் சிறப்புப் பராமரிப்பு பணிகள் ரூ.155.11 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.